# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1965/5 - 2016 මැයි මස 02 වැනි සඳුදා - 2016.05.02

*1965/5 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்***

*40 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை*

*பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி ஆகிய நான், 1963 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 40 (1) ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் பயனால், இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தில் முன்மொழியப்பட்ட ஆதனத்தினை கையகப்படுத்துவதற்கு இத்தால் அனுமதியளிக்கின்றேன்.*

சந்திம வீரக்கொடி,
பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

*2016, மே 02.*

**அட்டவணை**

*வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிங்களப்பட்டுவ சிறு பிரிவு , மின்னேரியாக் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள "பட்டபிலிகந்த பகல வத்தை" என்றழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. அபயகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993.10.19 ஆந் திகதிய 545 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட சகலதும் பிரித்து துண்டு 1 என அடையாளமிடப்பட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு- வடக்கு : எச். ஆரோன்சிங்ஹோ என்பவரினால் உரிமை கோரப்படும் ஆதனம் ; கிழக்கு : எச். ஆரோன்சிங்ஹோ என்பவரினால் உரிமைகோரப்படும் ஆதனம் ; தெற்கு : தபால் அலுவலகம், மின்னேரியா ; மற்றும் மேற்கு: பிரதான வீதி மற்றும் சொல்லப்பட்ட 545 ஆம் வரைபடத்திற்கமைய இருபத்தேழு தசம் எட்டு ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ.27.89 பே.) (0.07054 ஹெக்டெயார்).*

*5- 465*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.